1993 ஏப்ரல் 28]

மனைக்கு எடுத்து வந்து அங்கே நாம் அவர்களை காப்பாற்றுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. அதிலே காலதாமதம் ஏற்பட்டுவிட்டால் அவர்கள் இறந்து விடுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, இந்தச் சங்கடங்களை போக்குவதற்கு, பொது மக்கள் கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு எங்கேயாவது இப்படிப்பட்ட சிரமங்கள் இருக்கின்ற இடத்திலே அல்லது இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படுகின்ற இடத்திலே அவர்கள் தண்ணீரை கொதிக்க வைத்து குடிக்க வேண்டும். அதே போன்று உணவை சுட வைத்து சாப்பிடுவது இப்படிப்பட்ட நல்ல சூழ்நிலைகளை அவர்கள் கடைப்பிடித்தால் இந்தப் பிரச்சினைகள் முழுமையாக தீர்க்கப்படும் என்று கருதுகிறேன். எனவே, அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, தனியாக ஆய்வு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். தொடர்ந்து அந்த ஆய்வு செய்து இதைத் தவிர வேறு ஏதாவது பிரத்தியேகக் காரணம் இருக்குமா என்பது பற்றி சிந்திக்கும்படி, அதைப் பற்றி கேட்கும்படி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நாங்கள் அறிவுறுத்துவோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 506, திரு. பி. சொக்கலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

506—

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மிக முக்கிய நபர்களுக்காக இருக்கைகள் ஒதுக்கீடு.

*9789—திரு. பி. சொக்கலிங்கம் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில் மிக முக்கிய நபர்களுக்கு (V.I.P.) என இரண்டு இருக்கை ஒதுக்க ஆணை இருந்தும் தற்போது எந்த பேருந்திலும் இடம் ஒதுக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இரண்டு இருக்கைகள் மிக முக்கிய நபர்களுக்கு ஒதுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1993 ஏப்ரல் 28

(அ) அரசு போக்குவரத்துக் கழகத்தின் தொலை தூரப் பேருந்துகள் அனைத்திலும் மிக முக்கிய நபர்களுக்கு என்று இரண்டு இருக்கைகள் ஒதுக்கப்படுகின்றன. முக்கியமாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் இருக்கைகள் எண். 3, 4, 5 மற்றும் 6 ஆகியவற்றை மறுக்கக்கூடும் என்ற நிபந்தனையுடன் பதிவு செய்தல் என்ற வழிமுறையை பின்பற்றி பயணிகளுக்கு ஒதுக்கலாம் என்று நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

முற்பகல் 10.30

திரு. பி. சொக்கலிங்கம்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கோ அல்லது தொகுதி முன்னேற்றம் குறித்தோ சென்னை அல்லது மற்ற ஊர்களுக்குப் பயணம் செய்யும்போது அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளை மட்டும்தான் பயன்படுத்தும் சூழ்நிலை உள்ளது. அப்படி மதுராந்தகத்திலிருந்து பயணம் செய்யும்போது அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்தில் மிகவும் முக்கிய நபர்களுக்கு என இரண்டு இருக்கைகள் ஒதுக்க ஆணை இருந்தும், அந்த இருக்கைகள் காலியாக இல்லாமல் எத்தனையோ முறை நின்றே பயணம் செய்யவேண்டி உள்ளது. நடத்துநரிடம் கேட்டால் பேருந்து புறப்படுகிறபோது, புறப்படுகிற இடத்திலே இருந்துதான் நாங்கள் இடம் கொடுக்க முடியும். மதுராந்தகத்தில் ஏறினால் இடம் கொடுக்க முடியாது என்று கூறுகிறார்கள். இதைத் தவிர்க்கும்பொருட்டு அரசுப் போக்குவரத்துக் கழகப்பேருந்தில் மிகவும் முக்கிய நபர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட இருக்கைகளை மிகவும் முக்கிய நபர்கள் மட்டுமே பயன்படுத்தும் வகையில் எப்போதும் எந்த ஸ்டேஜிலேயும் காலியாக வைக்கப்படுமா என போற்றுதலுக்குரிய மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களிடத்திலிருந்து மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, புறப்படுகின்ற இடத்திலே இருந்துதான் இரண்டு இருக்கைகள் ஒதுக்கப்பட வேண்டும் என்று வேறு போக்குவரத்துக் கழகங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. திருவள்ளுவர் போககுவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையிலும் 4 இருக்கைகளை புறப்படுகிற இடத்தில் கடைசியாகப் புறப்படும் நேரம் வரையிலும் வைத்துக்கொள்ள வேண்டும் என்று அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் குறிப்பாக நாங்கள் இதை ரிசர்வ் செய்வதற்குக் காரணமே, இப்போது கன்னியாகுமரியை எடுத்துக் கொண்டால் அங்கே

1993 ஏப்ரல் 28]

இருந்து புறப்படுகிறபோது ஒரு சட்டமன்ற உறுப்பினர் கூட இல்லை என்று சொன்னால்— ஒரு இருக்கைக்கு 103 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டி இருக்கிறது— அதாவது அந்த 4 இருக்கைகளும் அப்படியே வருகிறபோது ஏறத்தாழ 103 ரூபாய் ஒரு இருக்கைக்கு என்று சொன்னால் 4 இருக்கைகளுக்கும் ஏறத்தாழ 412 ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. அதன் காரணத்தால்தான் ரிசர்வ் செய்து விடுகிறோம். இப்படி நஷ்டம் வராமல் தவிர்க்கின்ற வகையில் உங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் உறுதுணையாக இருந்தால்தான் போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்தில் இயங்காமல் இருக்க வாய்ப்பு ஏற்படும். ஆகவே உங்களுடைய உறுதுணையைத் தெரிந்து பேருந்து புறப்படுகிற அந்த இடத்தில் உங்களுக்குத் தேவையான இருக்கைகள் பேருந்து புறப்படும் வரையிலும் இருக்கும்.

திரு. பி. சொக்கலிங்கம்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நஷ்டத்தைப் பற்றிக் கூறினார்கள். வரவேற்கிறேன். இருப்பினும் ஏற்றப்படுகிற பயணிகள், மிகவும் முக்கிய நபர்கள் ஏறும்போது அந்த மிக முக்கிய நபர்களுக்கு அந்த இடத்தை ஒதுக்கித் தரவேண்டும் என்று முன்கூட்டியே அறிவிக்கப்படுமா என்பதை அறிவதோடு, சென்னையில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையம் சென்று பயணம் செய்ய பேருந்தில் ஏறினால் நடத்துநர் அனுமதிச் சீட்டு, அதாவது பாஸ் வாங்கி வாருங்கள் என்று கூறுகிறார். அனுமதி சீட்டு பெற அலுவலகம் சென்றால் குறைந்தது அரை மணி நேரம் கூட நிற்கவேண்டி உள்ளது. இதைத் தவிர்க்கும் பொருட்டு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், மிகவும் முக்கிய நபர்கள் ஐடென்டிஃபிக்கேஷன் கார்டைக் காட்டினால் அதைப் பார்த்தாவது நடத்துநர்கள் இனிமேலாவது அனுமதிச் சீட்டை எங்களிடம் கேட்காமல் பயணம் செய்ய அனுமதிக்க மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற ஏதாவது குறைகளை என்னிடத்திலே சுட்டிக்காட்டினால் எந்த நடத்துநர் அதுபோன்ற தவறான முறைகளைக் கையாண்டாரோ அவர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதேநேரத்தில் அந்த இருக்கைகளை யாருக்காவது கொடுத்துவிட்டால் சட்டமன்ற உறுப்பினர்கள் வருகிறபோது அவர்கள் வேறு இருக்கைக்கு மாற்றப்படுவார்களா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மறுக்கக்கூடும் என்ற அடிப்படையில்தான் அந்த இருக்கைகள் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர் வருகிற நேரத்தில் அந்த இருக்கையைவிட்டு வேறு இருக்கை காலியாக இருந்தால் அவர்கள் போக வேண்டும் அப்படிப் போகவில்லை என்று சொன்னால் அதிலே வருகிற நடத்துநர் யாராக இருந்தாலும் தவறைச் சுட்டிக்காட்டினால் அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[1993 ஏப்ரல் 28

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் நான் ஒரு முறை பெங்களூர் சென்றபோது திருவள்ளுவர் பேருந்தில் சீட்கேட்ட போது இங்கே அந்த ஆணை இல்லை தமிழ்நாட்டுக் மட்டும் தான் அந்த ஆணை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நாங்கள் போகும்போது சட்டமன்றத்திலே கூட விதிகளின்படி சட்டமன்ற உறுப்பினர்கள் வந்தால் மரியாதை கொடுக்கவேண் வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் மரியாதை கூட பெங்களூரில் கொடுக்கப்படுவதில்லை. எனவே பெங்களூரில் இருந்து வருவதற்கும் இந்த ஆணை இடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோல் அங்கே வேலை செய்யும் டைம்கீப்பர்கள் போன்றவர்கள் சட்டமன்ற உறுப் பினர்கள் வந்தால் மரியாதை கொடுப்பதற்கு அமைச்சர் அவர் கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கின்ற பகுதிகளிலே தான் சுற்றிக்கொள்வதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. வேறு மாநில மாநிலத்திற்குச் செல்கிறபோது. உரிய மரியாதை தரப்பட வில்லை என்று சுட்டிக் காட்டுவார்களேயானால் அவர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 507 திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

507—

பாப்பான்விடுதி வனத்துறைக்குச் சொந்தமான முந்திரிக் காடுகள்.

*10214—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு போக்கு வரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியில் பாப்பான்விடுதியில் உள்ள வனத்துறைக்குச் சொந்தமான முந்திரிக் காடுகளின் 1990—91-ம் ஆண்டின் வருமானம் என்ன ?

(ஆ) அந்தக் காடுகள் எந்த முறையில் ஒப்பந்தத்திற்கு விடப்படுகிறது ?